2019 ஜூலை 9]

பேசி, துறை ரீதியாக எங்கள் அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு, இந்த இடத்தில் கட்டலாமா, கட்டினால், அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிந்து கட்டினால் நன்றாக இருக்கும். சில இடங்களில் கடைகள் அமைவதை மக்கள் விரும்புவதில்லை. சில விஷயங்கள் clash ஆகின்றன. மிகவும் தூரத்தில் இருக்கிறது; பாதுகாப்பில்லாத தன்மை எல்லாம் இருக்கிறது. அதனால்தான் இந்தமாதிரி நிலை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் கேள்வி கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கடையைத் திறப்பதற்கு என்ன வழிவகை இருக்கிறது என்பது குறித்து துறை ரீதியாக உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, சகோதரிக்கு நிச்சயமாக நல்ல பதிலாக அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

துணை மின் நிலையம்

***39075—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், அ. கோவில்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அ. கோவில்பட்டி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு

முதல்வர் அவர்கள் இப்போதுதான், அதாவது 24–6–2019 அன்று, அந்தப் பகுதியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்ற ஒரு பகுதியில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் ஒன்றை அமைத்திருக்கின்றார்கள். அதனால் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதே எனது புனித கடமை என்றார் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இருண்டு கிடந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி, சொன்னபடி செய்ததோடு மட்டுமல்லாமல், சொல்லாததையும், பல மக்கள் நலத் திட்டங்களையும் செய்தவர் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில் கொண்டிருக்கும் எங்கள் குடும்ப குல தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

அம்மா வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் இப்பேரவையில் விதி 110–ன்கீழ் மின்கட்டமைப்பை வலுப்படுத்த 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 47 இடங்களில் 33/11 கே.வி. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருப்பதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் IPDS திட்டத்தின்மூலம் அலங்காநல்லூரில் 33/11 கே.வி. துணை மின் நிலையமும், DDUGJY திட்டத்தின்மூலம் வாடிப்பட்டி, கொண்டயன்பட்டி, அய்யங்கோட்டை, மேலக்கால்,

குலசேகரன்கோட்டை, குமாரம் ஆகிய இடங்களில் 33/11 கே.வி. துணை மின் நிலையங்களும் அமைக்க ஒப்புதல் வழங்கி, அவற்றில் அலங்காநல்லூர், வாடிப்பட்டி, கொண்டயம்பட்டி, அய்யங்கோட்டை ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைத்து பொது மக்களுடைய பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தமைக்காக எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள மேலக்கால், குமாரம், குலசேகரன்கோட்டை ஆகிய பகுதிகளில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து, அவற்றுக்கு விரைவிலே ஒப்புதல் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அ. கோவில்பட்டி என்பது அலங்காநல்லூரிலிருந்து சுமார் 8 கி.மீ. தூரத்தில் உள்ளது. அதிக தூரம் மின்பாதை செல்வதால், குறைந்த மின்னழுத்தம் காரணமாக (low voltage) அப்பகுதியில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் வீடுகளில் உள்ள மிக்சி, கிரைண்டர் ஆகிய மின் சாதனங்களைப் பயன்படுத்த முடியாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். எனவே, அ. கோவில்பட்டியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதியிலிருந்து 2.8 கிலோ மீட்டர் அருகில்தான் புதிய துணை மின் நிலையம் இப்பொழுது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து மின்சாரம் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அங்கு மின் பளுவும் தேவையான அளவைவிட குறைவாகத்தான் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, எதிர்காலத்தில் இதுமாதிரி தேவையிருக்கும் என்று ஏற்கெனவே சொன்ன பகுதிகளில் எல்லாம் IPDS திட்டத்தின்மூலம் துணை மின் நிலையங்கள் புதிதாக அமைக்கவிருக்கின்றோம். ஆக, அதற்குமேல் தேவையிருப்பின், அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் ஒன்றியம், குமாரத்தில் தற்போது 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க இடம் பார்க்கப்பட்டுள்ளது. இந்த 33/11 கே.வி. துணை மின் நிலையம், ஏற்கெனவே மாணிக்கம்பட்டியில் இருந்த துணை மின் நிலையத்திலிருந்து 18 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அங்கிருந்து இந்த 33/11 கே.வி. துணை மின் நிலையத்தை அமைப்பதாக இருந்தால் மிக சிரமமான காரியம் என்று மின்சாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். இந்த இடத்திற்கு அருகில் 5 கிலோ மீட்டர் தொலைவில் ஆணையூர் மின் பகிர்மான நிலையம் உள்ளது. அங்கிருந்து 110 கே.வி. துணை மின் நிலையத்தை அமைத்துத் தந்தால், இந்தப் பகுதியிலே மின் தட்டுப்பாடே இல்லை என்ற நிலைமையை உருவாக்க முடியும்.

முற்பகல் 10—20

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டுவோம் என்று சொன்னதை நிறைவேற்றிக் காட்டினார்கள். அதுபோல மின் தட்டுப்பாடே இல்லாத நிலையை உருவாக்க இது ஏதுவாக இருக்கும் என்பதால் இந்த இடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 110 KV துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில், தேவசேரி என்ற பகுதியிலிருந்து 11 கிலோ வோல்ட் மின்னூட்டி வழியாக 1 x 8 MVA திறனுடைய மின்மாற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது அங்கு மின் பளு 4.53 MVA தான் இருக்கின்றது. இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்கு என்ன தேவையிருக்கிறது என்பதையெல்லாம் அறிந்துதான் செயலாற்றியிருக்கின்றோம். இன்னும் 5 ஆண்டுக் காலத்தில் கூடுதலாக, அதாவது ஏற்கெனவே இருக்கின்ற transformer பழுதாகிவிட்டது என்று சொன்னால், கூடுதலாக மாற்று transformer வேண்டுமென்பதற்காக 1 x 8 MVA transformer வைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை 110 KV ஆக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

2019 ஜூலை 9]

அந்த அளவிற்கு மின் பளு தற்போது இல்லை. தேவையிருப்பின், எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

தார்ச்சாலை

***26700—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், களபம் ஊராட்சி, களபம் முதல் அதவத்தூர் வரை தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், களபம் ஊராட்சி, களபம் முதல் அதவத்தூர் வரையிலான 9.56 கிலோ மீட்டர் நீளச் சாலையில், இதுவரை 8.80 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.*

திரு. ஏ. இரத்தினசபாபதி: *'மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம், மாணிக்கக் கோயிலடா' என்ற மாணிக்கத் தலைவரின்*